அதிபர் அமரர் சி. நடராஜா அவர்களின் சேவை (1971 - 1978) நினைவாக....

# சாரல்

இதழ்: 11

ஆனித்திங்கள் 2019

வள்ளுவர் ஆண்டு 2050

**OBA** ஆண்டு செய்தி மடல்

30.06.2019

பழையமாணவர் சங்கம்

தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி



## ஏணியாய் நின்று எம்மை ஏற்றிவிட்டவர் அதிபர் அமரர் நடராஜா

யாழ்மண்ணில் கரவெட்டி எனும் ஊரை பிறப்பிடமாகக்கொண்டு வாழ்ந்தவர், வாழும் காலத்தில் கல்வியில் காட்டிய சிறப்பும் பரீட்சையில் தேறிய வெற்றியும் இவரை அதிபராக்கியது. இடமாற்றம் எனும் பெயரினால் குரைகடலோரம் நித்திலம் கொழிக்கும் கோணமாமலை தன்னில் அதிபராக கடமை ஏற்று தன் பாதத்தினை 1971ம் ஆண்டில் பதித்தார்.

ஆண்மாணாக்கருக்கென தனியிடம் பிடித்து மிளிர்ந்து கொண்டிருந்த இந்துக்கல்லூரி இருகரம் நீட்டி இவரை அழைத்தது. சாதனை ஒன்றை சாதிக்கவென தனிமரமாக வராது குடும்பமாய்வந்து பணிதனை மூச்சாக்கினார்.

"செய்யும் தொழிலே தெய்வம்" என்பதற்கு இணங்க கல்வியின் பெறுபேற்றை கூட்ட பாடசாலையின் கல்வி மேற்பார்வையினை தினமும் மேற்கொண்டார். உயர்தர வகுப்புகள் சிறப்புடன் வரவேண்டுமென கங்கணம் கட்டி ஆசான்களையும் வழிப்படுத்தி நெறிப்படுத்தி உஷாராக்கினார். திருமலை பெண்கள் உயர்தரத்தினை இப்பள்ளியில் கற்க வழிகிடைத்த காலம் இவரின் காலமே. இனம் பாராது பிரதேச வேறுபாடுபாராது அனைத்து மாணவர்களையும் ஒன்றாக நினைத்து திருமலையின் கல்வியின் தரம் உயரவேண்டுமென தரமான அதிபராக நின்றவர். மாணவர்களுக்கு கொடுக்கும் தண்டனையைக்கூட மறந்து மன்னிக்கும் மாண்புடையவர். குடும்பத்தோடு பள்ளியில் இருந்ததால் சிதறாத சிந்தனை, அர்பணிப்பான பணி, அயராத உழைப்பு, நீரோட்டமாய் நேரிய சிந்தனை நான்கு வருடங்களில் இவருக்கு நல்அறுவடையை அளித்தது. முதன் முதலாக கணிதபிரிவு மாணவன் "3ஏ" சித்தியை பெற இவரின் உழைப்பு வித்திட்டது. அது மட்டுமின்றி உயர்தர பிரிவு சகல துறைகளிலும் கூடிய எண்ணிக்கையான மாணவர்கள் பல்கலைக்கழகம் புகவும் வழிகிடைத்தது.

ஏற்றிவிட்டவரை ஏறியவன் மறப்பதில்லை அது போன்றே அந்த மாணவர்கள் இன்னும் இவரை மறக்காமல் நினைக்கிறார்கள். அவருடன் பணியாற்றிய ஆசான்களும் சளைத்தவர்கள் அல்ல அவர்களும் அவருடன் இணைந்த சேவையை ஆற்றியதுடன் அவரின் பாராட்டையும் பெற்று நினைவையும் நிழற்படமாகக்கியுள்ளனர்.

ஊரில் ஒரு நல்ல மரம் ஊருக்கெல்லாம் நிழல் தரும் ஆயுள் பல கூடி நின்று தங்குபவர்களுக்கு இடம் கொடுக்கும் நாட்கள் நகர்ந்தாலும் ஆண்டுகள் பல உருண்டாலும் காலம் கடந்தாலும் நன்மரமாய் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரிக்கு புகழ்கொடுத்த நடராஜா அதிபர் வாழ்ந்த காலம் ஒரு பொற்காலமே, கல்வெட்டில் பதிக்கா விடிலும் எமது நினைவுகளில் முத்துகளாய் பதித்து நன்றி கூறுகின்றோம்.

ஆவணத் தொகுப்பு:
திரு.திருமதி.சுந்தரராஜன்
பழைய மாணவர்கள்

## தூரநோக்கு

ஒழுக்க விழுமியங்களிலும், கல்வியிலும், மொழியியல் தேர்ச்சியிலும்,
இணைப்பாடவிதானங்களிலும் சாதனை படைக்கும் ஒரு முன்மாதிரியான கல்லூரி

## பணிக்கூற்று

கல்லூரியின் அடைவுகளை உச்சப்படுத்துவதற்கும், தேவையான வளங்களைத் தேடிக்கொள்வதற்கும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வாழும் பழைய மாணவர்களினதும் வளவாளர்களினதும் பங்களிப்புடன் கூடிய சேவை அர்ப்பணிப்பு.

## Vision

"An exemplary College in creating best records in discipline, education, Lingual proficiency and co-curricular activities."

## Mission

"Dedication of Service with the contribution of the resource persons and the old students living in inland and abroad for Obtaning the required resource and Maximizing the achievements of the college"

வெளியீடு : OBA, Trinco, Hindu
e-mail : oba@trincohindu.sch.lk
Web : www.trincohindu.sch.lk/oba/index.html

ஆலோசகர் : திரு.செ.பத்மசீலன்
பதிப்பாசிரியர் : திரு.இ.அசோக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபரின் பார்வையில் பழையமாணவர் சங்கம்...

எமது கல்லூரியின் வரலாற்றில் பழைய மாணவர் சங்கம் 82 வருடகால வரலாற்றைக்கொண்டது. இவ்வமைப்பானது எமது கல்லூரியின் வளர்ச்சியில் மிகவும் அக்கறையுடன் இயங்கிவருகின்றது. இவ்வமைப்பின் நிர்வாகத்தினை வழிநடத்துவதில் இன்றுவரையில் பலரது பங்களிப்பு கிடைக்கப்பெற்றமையிட்டு அவர்களை பாராட்டுகின்றேன்.

பழைய மாணவர் சங்கம் எமது கல்லூரியின் கல்வி அபிவிருத்தி, இணைப்பாடவிதான அபிவிருத்தி, பௌதீகவள அபிவிருத்தி, மாணவர் நலன் பேணல் ஆகியவற்றுக்கான உதவிகளை வழங்கி வருவதையிட்டு மகிழ்வடைகின்றேன்.

எமது தாய்ச்சங்கத்தின் கீழ் ஐக்கிய இராச்சியம், கனடா, பிரான்ஸ், சுவிஸ்லாந்து மற்றும் கொழும்புக்கிளைகள் செயற் பட்டு வருகின்றன. இவை கல்லூரியின் அபிவிருத்தி விடயங்க ளில் தங்களால் முடிந்த அளவு உதவிகளை வழங்கி வருவதுடன் எமது மாவட்டத்தின் பின்தங்கிய கிராமங்களது கல்வி மற்றும் வாழ்வாதாரத் தேவைகளுக்கான சில உதவி-களை வழங்கிவருகின்றன. அத்துடன் வெளிநாட்டுக்கிளைகள் தம் குடும்ப அங்கத்தவர்கள் இடையே ஒற்றுமையையும் தொடர்புகளையும் வலுப்படுத்தும் நோக்கில் ஒன்றுகூடல்கள், கலை நிகழ்வுகள் என்பன நடத்தி வருவது நல்ல முன் மாதிரியா கும்.

கல்லூரி யூன் 30ம் திகதியை பழையமாணவர் தினமாக பிரகடனப்படுத்தி வருடாந்த நாட்காட்டியில் உட்படுத்தியதுடன் இதற்கான செயற்பாடுகளுக்கான ஒழுங்குகளையும் முன்னெடுத்து வருகின்றது. இத் தினத்தையொட்டி பழைய மாணவர்களிடையேயும் ஆசிரியர்கள் மாணவர்களிடையேயும் உறவுகளை பேணும் நோக்கில் பல்வேறு விளையாட்டு நிகழ்வுகளை நடத்தி கௌரவிக்கின்றனர். மேலும் கல்லூரியில் கற்ற மாணவர்கள் கல்வி, சமூக சேவையில் உயர்நிலையை அடைபவர்களை வருடாந்தம் பாராட்டி கௌரவித்துவருவது மாணவர்களுக்கும், பழைய மாணவர்களுக்கும் முன்மாதிரியான செயற்பாடாக அமைந்து வருகிறது.

இவ்வருடம் நடுப்பகுதியில் பாடசாலையின் பாதுகாப்பு தொடர்பான ஏற்பாட்டிற்காக CCTV கமரா என்பனவற்றை ஆரம்பப்பிரிவிற்கும் கனிஷ்ட இடைநிலைப்பிரிவின் சூழலுக்கும் பொருத்துவதில் பழையமாணவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு நலன்விரும்பிகளும், லண்டன், கனடா பழை-யமாணவர் சங்கத்தினரும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர். இவ்வுதவிக்கு நன்றி கூற கடமைப் பட்டுள்ளேன்.

வருடாந்தம் நடைபெறுகின்ற பழையமாணவர் தினத்திற்கு சகல பழைய மாணவர்களும் பங்கேற்க வேண்டுமென்பது எனது எதிர்பார்ப்பாகும். அத்துடன் வருடாந்தம் நடைபெறுகின்றபொதுக்கூட்டத்திலும் பழைய மாணவர்கள் பங்கேற்று பழைய மாணவர் சங்கத்தை மேலும் முன்னெடுத்துச்செல்ல உங்களது பூரண பங்களிப்பை எதிர்பார்க்கின்றேன். கல்லூரியின் வளர்ச்சிக்கு சகல பழைய மாணவர்களது பங்களிப்பும், ஆலோசனையும், உதவிகளும் என்றென்றும் நல்க வேண்டுமென அன்பாக வேண்டி நிறைவு செய்கின்றேன்.

திரு.செ.பத்மசீலன்
தலைவர்-பழையமாணவர் சங்கம்
தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி
(தேசியபாடசாலை)
திருக்கோணமலை

## அன்று இந்துக்கல்லூரியின் மணி மகுடத்தில் மரகத மணிகள் பதித்த மகான்கள்

அன்று இந்துக்கல்லூரியின் அழகுக்கு அணிகலன் சேர்த்த அறிஞர்களை இன்றைய கல்லூரிச்சமூகம் நினைவு கூருதல் ஒரு கட்டாய தேவை எனும் எண்ணம் என் மனதில் உதித்தது. பழைய மாணவர் சங்கத்தினால் ஆண்டு தோறும் வெளியிடப்படும் “சாரல்” என்னும் சஞ்சிகையின் வாயிலாக இக்கடமையுணர்வையும் கடப்பாட்டையும் வெளிக்கொணர்தல் மிகவும் பொருத்தமானதொன்றாக அமைவதுடன் சாரல் சஞ்சிகைக்கும் மேன்மை அளிக்கும் என்பது என் பணிவான எண்ணம்.

சுவாமி விபுலானந்தர் அடிகளாரின் காலம் இந்துக் கல்லூரியில் ஒரு பொற்காலம் என்று அறிந்தோர் கூறுவதில் நிதர்சனம் நிறைந்துள்ளது. 1925ம் ஆண்டில் திருக்கோணமலை இராமகிருஷ்ண சங்க ஆச்சிரமத்தில் சுவாமி அவர்கள் தங்கியிருந்து நிறைவேற்றிய பணிகள் பல. இக்காலத்தில் அடிகளாரோடு இணைந்து பணியாற்றிய கல்விமான்கள் மிகவும் பயபக்தியுடனும் பணிவோடும் தமது கல்வி பணியினை நிறைவேற்றியிருந்தனர். ஒவ்வொரு ஆசிரிய பெருந்தகையும் பூரண அறிவினைக் கொண்டிருந்ததால் மாணவர்களுக்கு பாடங்களை புகட்டுவதில் தங்கு தடையின்றி பாயும் புனல் போல் விளங்கினர்.

1925ம் ஆண்டு விவேகானந்த சபையினால் “விவேகானந்தன்” எனும் சஞ்சிகை வெளியிடப்பட்டது அந்த சஞ்சிகையின் ஆசிரியராக சுவாமி விபுலானந்தர் தனது பணியினை திருகோணமலை இராமகிருஷ்ண சங்க ஆச்சிரமத்தில் இருந்த காலப்பகுதியில் நிறைவேற்றியிருந்தார். சுவாமியின் முதல் மாணவரான அறிஞர் மா.பீதாம்பரம் சுவாமி அவர்களோடு இணைந்து பல பணிகளை இந்துக்கல்லூரிக்கு ஆற்றியிருந்தார் சுவாமி மீது அளவில்லா பக்தியும் காதலும் கொண்டிருந்த பிதாம்பரம் சுவாமி அவர்களுக்கு ஒரு வெண்பா தொகுப்பினை எழுதியிருந்தார். ஆனால் அந்த வெண்பா தொகுப்பு நூலாக்கம் பெற்று வெளிவந்தமைக்கான ஆதாரங்கள் கிடைக்கப்பெறாமை கவலைக்குரிய விடயமே. மாபெரும் புலமையாளர் சுவாமி விபுலானந்தர் அவர்களை பற்றி நிறைய விடயங்களை மா.பீதாம்பரம் எழுதியிருந்தார். அவ்வாக்கங்களுக்கு நூல்வடிவம் கொடுப்பதற்காக பீதாம்பரின் மகன் அவற்றை எடுத்து சென்ற போது அன்று நாட்டில் நிலவிய இனக்கலவரத்தினால் அவைகள் யாவும் தீக்கரையாக்கப்பட்டதாக அறியக் கிடக்கின்றது அவ்வெண்பாக்களில் ஒன்று கீழே.

இயற்றமிழும் யாழ்நூலும் இன்பரசக்காட்சி
பயிலும் மதங்கனார் பரவும் - மயிலோனாய்
வந்துதித்து மாநிலத்தில் வண்டமிழுக்கு வாழ்வுதனைத்
தந்தார் விபுலானந்தர்

சுவாமி விபுலானந்தர் சிவபதம் அடைந்த பின் அடிகளாரின் ஞாபகமாக யாழ்ப்பாணத்தில் மா.பீதாம்பரம் அவர்களினால் ஒரு முத்தமிழ் விழா எடுக்கப்பட்டிருந்தது இவ்விழாவிற்கு சுவாமியின் மாணவர்களாகிய வித்துவான் வெள்ளைவாரணர் பேராசிரியர் ஆலால சுந்தரசெட்டியார் மற்றும் வீணைவித்தகர் சிவானந்தம் பிள்ளையும் இந்தியாவிலிருந்து அழைக்கப்பட்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் விழா மூன்று நாட்கள் வெகுசிறப்பாக நடைபெற்றது. புலவர் பீதாம்பரம் என்பவர் அடிகளாரின் அணுகத்தொண்டர். சுவாமிகளின் கட்டுரைகள் கவிதைகள் பாடல்கள் போன்ற பல ஆக்கங்கள் புலவர் பீதாம்பரத்தினாரிடம் இருந்தன ஆனால் அவைகள் யாவும் நூல்வடிவம் பெறாமை கவலை தரும் விடயமே. அரிய பெரிய அருமையான ஆவணங்கள் நூல்வடிவம் பெறாமல் மறைந்து போவது வரலாற்று நூல் களுக்கு வாழ்வு கொடுக்க வேணும் என எண்ணும் நல்லுள்ளங் களுக்கு பேரிழப்பே "வித்தகனிற்கு வித்தகன் சிறப்பு" எனும் பெரியோர் வாக்கிற்கமைய சுவாமி விபுலானந்தரின் சிறப்பினை எல்லாம் தமிழ் கூறும் நல்லுலகம் பெற்று பயனுறவேண்டும் என்பதில் புலவர் பீதாம்பரனாரின் வகிபாகம் வரையறையற்று காணப்பட்டது.

அழகு பலவகை என்பார்கள் உடையழகு, நடையழகு, உரையழகு, பொருளழகு, கலையழகு எனக்கூறப்புகின் நீண்டுகொண்டே போகும். மகாத்மா காந்தியை பார்காத வர்களும் அவர் பெயரைக் கூறிய மாத்திரத்தில் அவரையறியா மல் ஒரு பற்று உருவாகும் என்பதனால் நாம் அறிவோம் அந்த உடலில் அழகில்லை அழகில்லா உடலிலே அழகுள்ள ஒரு ஆத்மா இருந்ததனால் அந்த ஆத்மீகஅழகு முகத்தின் ஊடாக வெளிவந்து ஒருவிதக்கவர்ச்சியை உண்டாக்குகின்றது. அந்த ஆத்மீக அழகு கவர்ச்சி பார்த்தவரையெல்லாம் பணிய வைத்துவிடுகிறது அத்தகைய அழகு விபுலானந்தர் அடிகளா ரிடத்திலும் அவரோடு இணைந்துபணியாற்றிய ஆசிரியர்களிடத் திலும் காணப்பட்டது என்பது உண்மை தமிழை அழகொழுக பேசுவார் சுவாமி அவர்கள் ஆனால் சுவாமியோடு அண்டியிருந்த அறிஞ்ஞர்கள் எல்லோராலும் அவ்வழகை பின்பற்றி வெற்றி கொள்ள முடியவில்லை ஆனால் பீதாம்பரம் அவர்களுக்கு அது கைகூடியது.

**இந்துக்கல்லூரியின் சிறப்புக்கும் செழுமைக்கும் வித்திட்ட வர்கள் பலர் படிப்பிப்பது என்பது ஒரு கலை அந்த கலை வல்லுநர்கள் இக்காலத்தில் அரிதரிது அடிகளார் விஞ்ஞானக் கல்வி கற்பிப்பதும் பீதாம்பரனார் கணிதக்கல்வி கற்பிப்பதும் இராமச்சந்திரனார் ஆங்கில கல்வி போதிப்பதும் பெரியதம்பியார் கம்பன் கவியழகு காட்டுவதும் பார்க்கவும் அழகு கேட்கவும் அழகு அதன் பயனும் அழகே. இவர்க ளெல்லாம் ஆசிரியர்களாக இந்துக்கல்லூரியில் இருந்து கற்பித்த காலம் ஒரு பொற்காலம் என்பது நிதர்சனமே.**

அக்காலத்தில் மாணவர்களிடையே மனத்தென்பும் வீரவு ணர்ச்சியும் காணப்பட்டது உறங்கி கிடக்கும் ஆற்றல்களை யெல்லாம் வெளிக் கொணர்ந்து மாணவர்களுக்கு வெற்றிமேல் வெற்றி கிடைக்க வழிசமைத்தார்கள். இப்பெருமையெல்லாம் மேற்கூறிய ஆசான்களையே சேரும்.

இவ்வாசிரியர்கள் யாவரும் பூரணத்துவம் பெற்றிருந்தால் யாராவது இந்துக்கல்லூரிக்கு வந்தால் உள்ளூர ஒரு தயக்கம் ஒவ்வொரு துறைக்கும் ஒரு உரைகல்லு இருக்கின்றது என்பதுதான் அந்த தயக்கம் ஆங்கில துறையில் இராம சந்திரனார் எனும் உரை கல்லு படிப்பித்தல் கலையில் பீதாம்பர னார் எனும் உரைகல்லு விஞ்ஞானத்துறையிலும் தமிழ்த் துறை யிலும் அடிகளாரோடு புலவர் மணியும் இருந்தார்கள். சில கல்வி நிபுணர்கள் பரிசோதகர்கள் தெரியாமற் தங்களை இந்த உரை கல்லுகளில் உரைத்துக்கொண்டார்கள் பத்தரைமாற்றுப் பசும் பொன் என தங்களை நினைத்துக்கொண்டு இருந்தவர்கள் எல்லோரும் மருண்டு வியந்து மௌனித்துப் போனார்கள்.

அடிகளார் இரண்டு வருடங்கள் அதிபராக இந்தக் கல்லூரியில் பணியாற்றியிருந்தார் அக்கால பகுதியில் ஆசிரியர்களுக்கு ஓய்வில்லை புதுப்புது முறைகளை படிப்பித்தல் அவற்றை முறையே மாணவர்களுக்கு புகட்டுதல் போன்றவற்றில் மிகவும் கண்ணும் கருத்துமாக இருந்து செயலாற்றியிருந்தார். புதிய உத்திகளையும் படிப்பித்தல் முறை களையும் ஆசிரியர்கள் கற்காதிருந்தால் அது பழஞ்சரக்கு வியா பாரம் ஆகிவிடும் என்று அடிகளார் அடிக்கடி கூறிக்கொள்வார். ஆசிரியர்களுக்கு இலகுவில் சினம் வந்து விடுமானால் அது மாணவர்களின் நிலையை கவலைக்கிட மாக்கிவிடும் ஒரு உத்தம ஆசிரியருக்கு சினம் வருவதில்லை பொறுமை என்னும்அணிகலன் அவருக்கு அழகு சேர்க்கும் அன்பு அனைவரையும் பிணைக்கும் ஆழ்ந்த கல்வியறிவு மரியா தையை கொண்டுவரும் இந்த உயரிய பண்புகள் அன்றைய இந்துக்கல்லூரியின் ஆசிரியர் குழாமில் நிறைந்தே காணப் பட்டது அதனால் தான் இந்துக் கல்லூரியின் மணி மகுடத்தில் மரகத மணிகளை பதித்து மேலும் கல்லூரியின் அழகினை அவர்களால் மெருகூட்டமுடிந்தது **"ஒவ்வொரு துறை யிலும் ஒரு உரைகல்லு உரசிப்பார்த்தவர்கள் விறைத்துப் போய் நின்றார்கள்"** எனும் தகவலை அறியும் போது மீண்டும் அன்றைய நிலை இன்றைய இந்துக்கல்லூரிக்கு வராதா என்ற எண்ணம் ஒவ்வொரு இதயங்களிலும் எழுந்து நின்று ஏக்கப்பார்வை பார்க்கின்றது.. "தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சிதன் மெய்வருந்தக் கூலிதரும்" என்னும் வள்ளுவ பெருந்தகையின் குறளை வசப்படுத்திக்கொண்டு கல்வியில் முன்னேறுவோம் எனக் கூறி பணிவுடன் விடைபெற்று முடிக்கின்றேன்.

**"கற்றாரை கற்றாரே காமுறுவர்"**


சண்பாரதிநாதன்
முன்னாள் செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
தி/இ.கி.ச கோணேஸ்வரா இந்துக்கல்லூரி
(தேசிய பாடசாலை)
திருக்கோணமலை


## கனடா பழைய மாணவர் சங்கத்தின் பங்களிப்புடன் க.பொ.த உ/த மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2018 யூலை தொடக்கம் 2019 ஜீன் வரையான காலப்பகுதியில் பழைய மாணவர் சங்கத்தின் காத்திரமான பணிகள்

1. ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்கத்தின் நிதிப்பங்களிப்புடன் ரூ. 600,000 பெறுமதியான Duplo பிரதி பண்ணும் இயந்திரம் ஒன்று கல்லூரிக்கும், சீதனன்வெளி மக்களின் நீர் தேவைகருதி இரண்டு கிணறுகள் ரூபா 600,000 செலவில் பழைய மாணவர்கள் திரு.கு. பத்மநாதன் மற்றும் திரு.நா.இராஜநாதன் சேர் அவர்களின் வழிகாட்டுத லுடன் பாவனைக்கு ஏற்ற வகையில் திருத்தி அமைக்கப்பட்டு வழங்கப்பட்டது.

2. பிரான்ஸ் பழைய மாணவர் சங்கத்தின் நிதிப்பங்களிப்பு 2018ம் ஆண்டு 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முதல் இடத்தை பெற்ற இரண்டு மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் இரண்டு பெற்றுக் கொடுக்கப்பட்டது.

3. எமது பாடசாலையில் காணப்படும் கல்விசார், கல்விசாரா ஊழியர்கள் பற்றாக்குறை தொடர்பாகவும் மைதானவேலி, சம்பந்தர் மண்டப திருத்தவேலை, மைதானத்திற்கும் பாடசாலைக்குமிடையிலான மேம்பாலம் அமைத்தல், மைதான அபிவிருத்திகள், கேட்போர் கூடம், மாணவர் விடுதி, ஆரம்பபிரிவு மாணவர்கள் கட்டிடம் மேம்படுத்தல் தொடர்பாக அதிமேதகு ஜனாதிபதி, கல்வி இராஜாங்க அமைச்சர், கல்வி அமைச்சின் உயர்அதிகாரிகள், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணக்கல்வி பணிப்பாளர், வலயக்கல்வி பணிப்பாளர் ஆகியோரை சந்தித்து எமது கோரிக்கைகளை எழுத்து மூலமாக முன்வைத்து இவ்விடயங்கள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது.

4. 2018ம் ஆண்டு ஒக்டோபர் 05ம் திகதி. சர்வதேச ஆசிரி யர் தினத்தை முன்னிட்டு காலைக் கூட்டத்தில் கல்லூரி ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டு அன்பளிப்பும் வழங்கிவைக்கப்பட்டது.

5. ஓய்வு பெற்று சென்ற திருகோணமலை வலயக் கல்விப்பணிப்பாளர் திரு.என்.விஜேந்திரன் அவர்களை வாழ்த்தி வாழ்த்துப்பா வழங்கப்பட்டது.

6. சர்வதேச சாரணர் ஜம்பொறியில் கலந்து கொண்ட மாணவன் செல்வன்.ஏ.பிரான்சிஸ் அவர்களுக்கு சிறு அன்பளிப்பு தொகை வழங்கப்பட்டு காலைக்கூட்டத்தில் பாராட்டி கௌரவிக்கப்பட்டது.

7. சர்வதேச கணித போட்டியிற்கு சிங்கபூர் சென்று பதக்கங்களையும் சான்றிதழ்களையும் பெற்று வந்த மாண வர்களை நினைவுச்சின்னம் வழங்கி காலைக்கூட்டத்தில் கௌரவித்து தேநீர் விருந்துபசாரம் வழங்கி வைக்கப் பட்டது.

8. மக்கேஷர் மைதானத்தில் இருந்த பார்வையாளர் அரங்கின் கதிரைகளை திருகோணமலை நகரசபையிடம் இருந்து பெற்று எமது கல்லூரியில் பழைய மாணவர் சங்கத்தால் அமைக்கப்பட்டிருந்த பார்வையாளர் அரங்கிற்கு பொருத்தி பாவனைக்காக வழங்கப்பட்டது.

9. வைத்திய துறைக்கு தெரிவு செய்யப்பட்ட வசதி குறைந்த மூன்று மாணவர்களுக்கு எமது பழைய மாணவர் திரு.வி.விஜேந்திரன் அவர்களது நிதிப்பங்களிப்புடன் ததெஸ்கொப் கருவி வழங்கி வைக்கப்பட்டது.

10. 1993ம் ஆண்டு உயர்தர மாணவர்களின் ஒத்துழைப் புடன் உள்ளக தொடர்பாடல் வசதி மேம்படுத்தப்பட்டது.

11. யொவன்புரவின் நிகழ்ச்சி திட்டத்தின் போது எமக்கு வழங்கப்பட்ட நீர்த்தாங்கி பாவனைக்கேற்ற வகையில் திருத்தியமைக்கப்பட்டது.

12. கல்லூரியின் உதைப்பந்தாட்ட அணியினருக்கு சீருடை பெற்றார் மற்றும் பழைய மாணவர் சங்க நிதியுதவியுடன் வழங்கப்பட்டது.

13. கல்லூரியின் மாணவர்களின் பாதுகாப்புக்காக கல்லூரி வீதிப்பக்க மதிலின் மேல் கம்பிவேலி அமைத்து வழங்கப்பட்டது.

14. கல்லூரியின் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக தொண்டர் அடிப்படையில் தாமாக விரும்பி கல்வி கற்பிக்கவரும் ஆசிரியர்களுக்கு ஒரு சிறு கொடுப்பனவு நலன்விரும்பி திரு.என்.நிலோஜ் அவர்களின் நிதிப்பங்களிப்புடன் வழங்கியமை.

15. கனடா பழைய மாணவர் சங்க அனுசரனையுடன் எமது கல்லூரியின் உயர்தர மாணவர்களின் பல்கலைக் கழக தெரிவை அதிகரிப்பதற்கு வெளிமாவட்ட சிறந்த வளவாளர்களைக் கொண்டு தொடர்ச்சியாக வகுப்புக்களை நடாத்தி வருகின்றமை.

16. செல்வி கு.சதாசிவம் அவர்களினது ஞாபகர்த்தமாக அவர்களது பெறாமகன் திரு.மனோகரன் அவர்களின் நிதிப்பங்களிப்பில் வருடாவருடம் நடாத்தப்படும் விஞ்ஞான வினாவிடை போட்டி இவ்வருடமும் சிறப்பாக நடாத்தப்பட்டது.

17. எமது கல்லூரி ஆரம்பபிரிவு இடைநிலை பிரிவு மாணவர்களின் பாதுகாப்புக்காக எமது பழைய மாணவர் கள், நலன்விரும்பிகள், ஐக்கிய இராச்சியம் மற்றும் கனடா பழைய மாணவர் சங்கங்களின் உதவியுடன் பாதுகாப்பு கமராக்கள் பொருத்தியமை. (CCTV)

18. தேசிய கல்லூரி தினம் ஆரம்பபிரிவு, இடைநிலைப் பிரிவு மாணவர்களின் நடைபவனியுடன் சிறப்பாக ஆசிரியர் பழைய மாணவர்கள் பங்குபற்றுதலுடன் ஒழுங்குபடுத்தியமை.

19. ஆரம்பப்பிரிவு பரிசளிப்பு விழா 2018 சிறப்பாக நடைபெற எமது பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம், பழைய மாணவர்களது பங்களிப்பு ஒத்துழைப்பு வழங்கியமை.

20. அவுஸ்திரேலியாவில் வசிக்கும் எமது பழைய மாணவர் திரு.த. ரமணாகரன் அவர்களால் எமது கல்லூரிக்கு வழங்கப்பட்ட 7 Focus Light மூலம் ஆரம்பபிரிவு, இடைநிலைப்பிரிவு, எமது திறந்தவெளி அரங்கம் என்பவை ஒளியூட்டப்பட்டமை.

மேற்கூறப்பட்ட விடயங்களுடன் கல்லூரியில் நடை பெற்ற ஏனைய நிகழ்வுகளிலும் எமது பழைய மாணவர்கள் பங்குபற்றி பூரண ஆதரவை வழங்கி வருகிறோம்.

திரு.தி.பிரபாதரன்
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி
(தேசிய பாடசாலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2018 ஆம் ஆண்டுக்கான பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட நிர்வாக சபை

தி/ இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் 2018 ஆண்டுக்கான புதிய நிர்வாக சபையினர் சங்க யாப்பு விதிக்கு அமைவாக 2018.07.08 ஆந் திகதி இடம் பெற்ற வருடாந்த பொதுக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களின் விபரம் வருமாறு.

1. திரு. செ.பத்மசீலன் -தலைவர்
2. திரு. வி. இராஜேந்திரன் -உபதலைவர்
3. திரு. ஆர். கைலவாசன் - உபதலைவர்
4. திரு. தி.பிரபாதரன் -செயலாளர்
5. திரு. இ. அசோக் -உப செயலாளர்
6. திரு. எஸ்.செல்வேந்திரன் -பொருளாளர்
7. திரு. கே. உமேக்ஷ்-உப பொருளாளர்
8. திரு. எஸ். சிறிதரன் - நிர்வாக சபை உறுப்பினர்
9. திரு. என். குமணன் - நிர்வாக சபை உறுப்பினர்
10. திரு. கே. ரஜனிகாந் - நிர்வாக சபை உறுப்பினர்
11. திரு. ஜி. சுகந்தன் - நிர்வாக சபை உறுப்பினர்
12. திரு. ஜி. சுரேஸ் - நிர்வாக சபை உறுப்பினர்
13. திரு. எஸ். சந்திரபவன் - நிர்வாக சபை உறுப்பினர்
14. திரு. ஆர். விமலதாஸ் - நிர்வாக சபை உறுப்பினர்
15. திரு. எஸ். சௌந்தரராஜன் - நிர்வாக சபை உறுப்பினர்
16. திரு. எம். சுமன் - நிர்வாக சபை உறுப்பினர்
17. திரு. எம். ஜி. ஜெயகாந் - நிர்வாக சபை உறுப்பினர்
18. திரு. எஸ். ஜெயசீலன் - நிர்வாக சபை உறுப்பினர்

*எமது நடப்பாண்டு செயற் திட்டங்கள்*

1. ஆரம்ப பிரிவு வளாகத்தில் 2000 பேர் இருந்து பார்க்கக்கூடிய வகையில் கேட்போர் கூடம் முழுவசதியுடன் அமைத்தல்.
2. ஆரம்ப பிரிவு வளாகத்தில் மாணவர் விடுதியினை அமைத்தல்.
3. விளையாட்டு மைதானத்தை சுற்றி மதிலுடன் கூடிய வேலி அமைத்தல்.
4. கல்லூரிக்கும் மைதானத்திற்கும் இடையில் மேம்பாலம் அமைத்தல்.
5. விளையாட்டு மைதானத்தை மேம்படுத்தல்.
6. பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்படும் மாணவர்களின் தொகையை அதிகரிப்பதற்கு உரிய வகுப்புக்களை கனடா ஐக்கிய இராட்சியம் பிரான்ஸ் சுவிஸ் பழைய மாணவர் சங்க கிளைகளின் நிதிப் பங்களிப்புடன் சிறந்த வளவாளர்களை கொண்டு தொடர்ச்சியாக செயற்படுதல்.
7. எமது கல்லூரிக்கு சேவையால் உயர்ந்து பெருமை சேர்த்து கொண்டிருக்கும் பழைய மாணவர்களை கௌரவித்தல்.
8. சம்பந்தர் மண்டபத்தை திருத்தியமைத்தல்.
9. Smart class Room வசதிகளை பெற்றக் கொடுத்தல்.
10. வகுப்பறைகளின் கற்கை உபகரணங்களை புதிய தொழில் நுட்பத்திற்கு அமைய மாற்றியமைத்தல்.
11. ஆரம்பபிரிவு அலுவலக கட்டிடத்தினை பூரணப்படுத்தல்.
12. கல்லூரி நிர்வாகத்தினால் அடையாளம் காணப்பட்ட தேவைகளை பூரணப்படுத்தல்

திரு.தி.பிரபாதரன்
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்

## லண்டன் பழையமாணவர் கிளையின் கற்றல் உபகரணம் வழங்கல் நிகழ்வு...



## அமரர். செல்வி.கு. சதாசிவம் ஞாபகார்த்த வினாவிடை போட்டி நிகழ்வு - 2019





## உதைபந்தாட்ட பயிற்சி நிகழ்வு - 2019





## மருத்துவத் துறைக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களை ஊக்குவிக்கும் நிகழ்வு - 2019






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர வகுப்பு மாணவர்களின் 2018ம் ஆண்டுக்குரிய அடைவு மட்டம் பற்றிய ஓர் ஆய்வு

| Gender | No Sat (sat in 6 or more subject) | No Pass(Pass in 6 subjects) | No qualified for A/L(3C,3S&pass in 1st language & maths | No qualified for A/L Physical science ("C" pass in Maths subject) | No qualified for A/L Bio science ("C" pass in Science subject) | No Failed in all subjects(sat in 6 or more subjects) | No pass in "9A" |
|---|---|---|---|---|---|---|---|
| Boys | 141 | 133 | 119 | 94 | 106 | 1 | 10 |
| Total | 141 | 133 | 119 | 94 | 106 | 1 | 10 |

Main Subject

| Subject | Sat | Pass | A | B | C | S | W | Percentage |
|---|---|---|---|---|---|---|---|---|
| Maths | 141 | 119 | 51 | 12 | 31 | 25 | 22 | 84.40 |
| Science | 141 | 133 | 27 | 20 | 59 | 27 | 8 | 94.33 |
| English | 141 | 126 | 42 | 17 | 36 | 31 | 15 | 89.36 |
| History | 141 | 138 | 37 | 26 | 47 | 28 | 3 | 97.87 |
| Tamil | 141 | 136 | 24 | 41 | 51 | 20 | 5 | 69.45 |

Subject :- Religion

| Subject | Subject No | Sat | Pass | A | B | C | S | W | % |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Hinduism | 12 | 123 | 117 | 69 | 13 | 16 | 6 | 6 | 95.122 |
| 6RC | 14 | 6 | 6 | 0 | 2 | 3 | 0 | 0 | 100 |
| N0RC | 15 | 3 | 3 | 1 | 0 | 1 | 0 | 0 | 100 |
| Isla0m | 16 | 9 | 8 | 0 | 0 | 7 | 1 | 1 | 88.889 |

| Basket Subject | | Subject No | Sat | Pass | A | B | C | S | W | % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Basket – 01 Subject | Geography | 61 | 19 | 17 | 2 | 2 | 11 | 2 | 2 | 89.47 |
| | Citizenship | 62 | | 0 | | | | | | 0 |
| | Enterpreneurship Edu | 63 | | 0 | | | | | | 0 |
| | Arabic | 72 | | 0 | | | | | | 0 |
| | 2nd Language Sin/Tam | 64 | | 0 | | | | | | 0 |
| | Business & Accounting | 60 | 122 | 119 | 29 | 21 | 43 | 26 | 3 | 97.54 |
| Basket – 02 Subject | Music | 42 | 38 | 38 | 30 | 5 | 1 | 2 | | 100 |
| | Art | 43 | 9 | 9 | 2 | 4 | 2 | 1 | | 100 |
| | Dancing | 45 | | 0 | | | | | | 0 |
| | Drama& Theatre | 51 | 46 | 46 | 1 | 7 | 28 | 10 | | 100 |
| | Tamil Literary | 48 | 33 | 32 | 11 | 5 | 8 | 8 | 1 | 96.97 |
| | English Literary | 46 | 14 | 14 | 4 | 4 | 4 | 2 | | 100 |
| Basket – 03 Subject | ICT | 80 | 78 | 77 | 32 | 15 | 24 | 6 | 1 | 98.72 |
| | Agriculture& Food Tech | 81 | 7 | 5 | 0 | 3 | 2 | 0 | 2 | 71.43 |
| | Design& Technology | 83 | 7 | 5 | 0 | 3 | 2 | 0 | 2 | 71.43 |
| | Arts& Craft | 84 | | 0 | | | | | | 0 |
| | Home Economics | 85 | | 0 | | | | | | 0 |
| | Health& Physical Edu | 86 | 56 | 55 | 16 | 11 | 24 | 4 | 1 | 98.21 |

## பிரான்ஸ் – பழைய மாணவர்களினால் கற்றல் ஊக்குவிப்பு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு







## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் ஓர் தொலைப் பார்வை

| S/No | Name | Marks |
|---|---|---|
| 1. | Thangeswaran Vithuz | 193 |
| 2. | Mohamed Munaz Mohamed Shamaz | 193 |
| 3. | Gnanaruban Jathurshikan | 188 |
| 4. | Thiruchchelvam Tharmithan | 186 |
| 5. | Pannerchelvam Prasanth | 185 |
| 6. | Thavishan Kirithesh | 184 |
| 7. | Gajendran Kaveeshaanaayan | 183 |
| 8. | Shivapalan Srisanka | 183 |
| 9. | Rathakrishnan | 183 |
| 10. | Ilankeswaran Tharvies | 183 |
| 11. | Prasath Thanukshan | 181 |
| 12. | Harikaran Dishakaran | 180 |
| 13. | Thavarasa Mithushan | 179 |
| 14. | Shanthakumar Mithulanjan | 178 |
| 15. | Kalaiganasuntharam Nithilan | 178 |
| 16. | Mugunthan Mithuran | 178 |
| 17. | Murugananthan Praveen | 178 |
| 18. | Nazeemkaran Raheesh Ahmed | 178 |
| 19. | Jayaasith Hareish | 177 |
| 20. | Dinesh Anoosh | 177 |
| 21. | Ravindranathan Karisham | 177 |
| 22. | Suthagar Aswin | 175 |
| 23. | Sugunathas Sharanithan | 175 |
| 24. | Pratheepan Prujithan | 175 |
| 25. | Partheepan Arkeeshan | 174 |
| 26. | Mahadevan Vigneswarma | 174 |
| 27. | Amalaraaj Thekith | 174 |
| 28. | Thirukumar Kobishan | 174 |
| 29. | Nanthakumar Shanjeeth | 173 |
| 30. | Kiritharavasan Danushagar | 173 |
| 31. | Sarishkumar | 173 |
| 32. | Kirikarasarma Kisanth | 172 |
| 33. | Sundaralingam Saimayuran | 172 |
| 34. | Sureshkumar santhosh | 172 |
| 35. | Armstrong shavieneish | 171 |
| 36. | Jeyakumar Jeyaneththiran | 170 |
| 37. | Sivakumar Sathursan | 169 |
| 38. | Satkunalingam Abishayan | 169 |
| 39. | Chandrathas Sashveehan | 168 |
| 40. | Suntharsan Hidujan | 168 |
| 41. | Sivaharan Hrithikshan | 168 |
| 42. | Kathiskumar Thiyan | 167 |
| 43. | Thangeswaran Vishvajith | 165 |
| 44. | Kirubaharan Keerthushaan | 165 |
| 45. | Vasantharooban Thaniskan | 164 |
| 46. | Mohamed Laheer Muhammath Mujahir Muqsith | 164 |
| 47. | Senthilkumar Thejaashwar | 164 |
| 48. | Selvendiran Videswar | 164 |
| 49. | Eswaran Susiththiran | 163 |
| 50. | Sritharan Sakgratharan | 163 |
| 51. | Thillainathan Perathanan | 162 |
| 52. | Vijayathasan Sivajugen | 162 |
| 53. | Manopawananthan Kulodshanan | 162 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்களின் 2018ம் ஆண்டுக்குரிய பரீட்சை பெறுபேறு பற்றிய பகுப்பாய்வு

| STREAM | SUBJECT | | A | B | C | S | F | NO.SAT | NO.PASS | PASS % | UNI YES | ALL F | I (S) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Physical Science & Bio Science | Physics | M | 4 | 6 | 16 | 20 | 9 | 55 | 46 | 83.64 | | | |
| | | B | 2 | 4 | 8 | 9 | 3 | 26 | 23 | 88.46 | | | |
| | | ***Total*** | ***6*** | ***10*** | ***24*** | ***29*** | ***12*** | ***81*** | ***69*** | ***85.18*** | | | |
| | Chemistry | B | 6 | 4 | 6 | 7 | 3 | 26 | 23 | 88.46 | | | |
| | | M | 8 | 6 | 11 | 16 | 14 | 55 | 41 | 74.54 | | | |
| | | ***Total*** | ***14*** | ***10*** | ***17*** | ***23*** | ***17*** | ***81*** | ***64*** | ***79.0*** | | | |
| | C.Maths | | 2 | 3 | 7 | 11 | 3 | 26 | 23 | 88.46 | 65.45 | 1/26 (3.8) | 2/26 |
| | Biology | | 8 | 8 | 8 | 15 | 16 | 55 | 39 | 70.9 | 80.76 | 5/55( 9.0) | 7/55 |

| STREAM | SUBJECT | A | B | C | S | F | NO.SAT | NO.PASS | PASS % | UNI YES | ALL F | I (S) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Commerce & Arts | Economics (Com) | 12 | 9 | 14 | 23 | 4 | 62 | 58 | 93.55 | | | |
| | Accounting | 11 | 4 | 7 | 24 | 16 | 62 | 46 | 74.19 | | | |
| | Buss.study | 8 | 14 | 18 | 15 | 7 | 62 | 55 | 88.7 | | | |
| | ***Total*** | ***31*** | ***27*** | ***39*** | ***62*** | ***27*** | ***186*** | | | | | |
| | | | | | | | | | | 44/62(70.96) | 3/62 | 2/62 |
| | Tamil | | 1 | 3 | 3 | 4 | | | | | | |
| | Hindu.C | | 1 | 3 | 1 | 1 | | | | | | |
| | Geography | | | 4 | 3 | 1 | | | | | | |
| | Economics (Arts) | | | 1 | 3 | | 4 | 4 | 100 | | | |
| | ***Total*** | ***0*** | ***2*** | ***11*** | ***10*** | ***6*** | ***4*** | | | | | |
| | | | | | | | | | | 8/11(72.72) | 1/11 | 1/11 |

## G.C.E O/L Best Performance - 2018

| Year | S.No | Name of The Student | Results | | |
|---|---|---|---|---|---|
| | | | A | B | C |
| 2018 | 1 | **Charles Hrrington Abishothman** | 9A | | |
| | 2 | **Niththiyanantharaja Thuvarahan** | 9A | | |
| | 3 | **Sivakumar Braveen** | 9A | | |
| | 4 | **Kunanathan Harrish** | 9A | | |
| | 5 | **Maheswaran Kishonath** | 9A | | |
| | 6 | **Arulkumaran Aakash** | 9A | | |
| | 7 | **Jegatheswaran Janenthan** | 9A | | |
| | 8 | **Sivaramanan Shanjeevan** | 9A | | |
| | 9 | **Rajakumaran Rakeshan** | 9A | | |
| | 10 | **Sarishkumar Piradickshan** | 9A | | |
| | 11 | Harithāran Diviyamainan | 8A | B | |
| | 12 | Kuruchandran Dinoshan | 8A | B | |
| | 13 | Jeyachandran Giriththigan | 8A | B | |
| | 14 | Muraleetharan Senthuran | 8A | B | |
| | 15 | Sasitharan Senthuuran | 8A | B | |
| | 16 | Saththiyaseelan Pravienan | 8A | B | |
| | 17 | Jeyaseelan Thanuwacshan | 8A | B | |
| | 18 | Sivarasa Amirthavarsan | 8A | | C |
| | 19 | Luckkumikanthan Laavanjan | 7A | 2B | |
| | 20 | Ravindran Kishor | 7A | 2B | |
| | 21 | Prashanthan Jahajith Roshan | 7A | 2B | |

## G.C.E A/L Best Performance - 2018

| *No* | *Engineering Entered Students* | *Results* | *D.Rank* |
|---|---|---|---|
| 1 | Balenndiran Lavan | 3A | 1 |
| 2 | Ravindranathan Sarangan | 3A | 2 |
| 3 | Sareefu Mohamed Sarraj | 3A | 4 |
| 4 | Thivagarasarma Karthick | 3A | 6 |
| 5 | Nallavairan Thakshanath | 2A.B | 8 |
| 6 | Thayaparan Arushan | 2A.B | 9 |
| 7 | Pathmarasa Jathurshan | 2A.B | 10 |
| 8 | Konamalai Sadatsaharan | 2A.B | 11 |
| 9 | Rathakrishnan Mathushaharan | 2A.B | 12 |
| 10 | Haritharan Rishikeiththanan | 2A.C | 23 |
| 11 | Puvanendhiran Hariharan | 3B | 24 |
| 12 | Vijayakumar Haris | A.B.C | 26 |
| 13 | Perinparasa Vinojan | 3B | 30 |

| *No* | *Medecine Entered Students* | *Results* | *D.Rank* |
|---|---|---|---|
| 1 | Gananachelvam Nishoban | 3A | 1 |
| 2 | Barathithasan Sathurshan | 3A | 3 |

| *No* | *Management Entered Students* | *Results* | *D.Rank* |
|---|---|---|---|
| 1 | Velenthiran Pratheekshan | 3A | 5 |
| 2 | Illango Nithushan | 3A | 6 |
| 3 | KogulanYatharshan | 3A | 9 |
| 4 | Lingarasa Niroshan | 3A | 16 |
| 5 | Ulagathas Vithushan | 3A | 19 |
| 6 | Thavalingam Prasannath | 3A | 22 |
| 7 | Nadesarathnam Acthuthan | 2A.B | 26 |
| 8 | Lavakuran Sivasanth | 3A | 27 |
| 9 | Kumarathas Luchshihan | 2A.B | 28 |
| 10 | Arulkirubaharan Noyal Aagash | 3A | 32 |
| 11 | Navarednaraja Dinoshan | 2A.B | 38 |
| 12 | Selvakumaran Prasanna | 3B | 80 |
| 13 | Thilaharasa Arun | A.B.C | 87 |

| *No* | *Arts Entered Students* | *Results* | *D.Rank* |
|---|---|---|---|
| 14 | Sritharan Dilukshan | A B C | 160 |

## 2019ம் ஆண்டு பழையமாணவர் தின விளையாட்டு நிகழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## கல்லூரியின் சேவைக்காக...

எமது கல்லூரியில் சேவையாற்றி ஓய்வு பெற்று, இடமாற்றம் பெற்றுச்சென்ற ஆசிரியர்கள், பகுதித்தலைவர்கள், கல்விசாரா ஊழியர்கள் அனைவரையும் நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவர்கள்










# AAA

**Building Construction & Meterials Supplier**

**No.777. NC Road,**
**3rd Mile Post, Uppuveli,**
**Trincomalee.**

# ANUJAN
## HARDWARE

**Branch: 6th Mile Post**
**Nilaveli Road**
**Periyakulam. Trincomalee.**

**Tel: 026 2050 452, Mob: 077 6396737, 071 3499874**

Printed By: SS DIGITAL'S - 0777 695 635

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org